**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை சந்திப்பு பயணியர் விடுதி அருகில் கழிவு நீர் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு, குளச்சல் – திங்கள் நகர் பிரதான சாலையின் மேற்பரப்பில், கழிவு நீர் தேங்கி, துர்நாற்றம் வீசுவதால், பொது மக்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுவதால். மேற்படி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி, குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் நகராட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தியதால், மேற்படி வடிகால் ஓடையினை சாலையின் மறுபக்கம் உள்ள வடிகால் ஓடையுடன் இணைப்பதற்கு, பிரதான சாலையின் குறுக்கே சிறுபாலம் அமைக்க மாநில நெடுஞ்சாலை துறையினை கேட்டுக்கொள்ளப்பட்டதில், மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு கால அவகாசம் தேவைப்படும் என்பதால், நகராட்சி மூலம் பணியினை மேற்கொள்வதற்கு தடையில்லா சான்று வழங்கப்படும் எனவும் ஆணையரிடம் நேரடியாக தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பணியின் அவரச அவசியத்தை கருத்தில் கொண்டு, அண்ணாசிலை சந்திப்பு பயணியர் விடுதி அருகில் குளச்சல் – திங்கள் நகர் பிரதான சாலையின் குறுக்கே சிறுபாலம் அமைக்கும் பணியினை ரூ.4,50,000/– மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.935/2019/இ1

**தீர்மானம் எண்.2080 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526–ல் மின்கலம் பழுதடைந்து வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளதால், பழுதடைந்த மின்கலத்திற்கு மாற்றாக புதிய மின்கலம் பொருத்தும் பணியினை மேற்கொள்வதற்கு, அவசர அவசியம் கருதி நேரடியாக பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | மாணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ்,<br>நாகர்கோவில் | ரூ.6400/– |
| 2. | கார்ஸ் பேட்டரி ஒர்க்ஸ்,<br>தக்கலை | ரூ.6500/– |
| 3. | சாய் பேட்டரி சர்வீஸ்<br>குளச்சல் | ரூ.6200/– |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், சாய் பேட்டரி சர்வீஸ், குளச்சல் நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057–1/2019/இ1

**தீர்மானம் எண்.2081 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.3

இந்நகராட்சியில், மூலதன மானிய நிதி/இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி : 2018-19 (Capital Grant fund / O & M Gap filling fund) திட்டத்தின் கீழ் ரூ. 108.00 இலட்சம் மதிப்பீட்டில், ஆலஞ்சி முதல் குளச்சல் வரை 200mm D.I பிரதான குழாய் அமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - செயல்முறைகள் ந.க.எண்.15040/2017/இ1 நாள் 31.01.2019 -ன் படி, நிர்வாக அனுமதி வழங்கி, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கான மதிப்பீட்டிற்கு, தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை - செயல்முறைகள் ந.க.எண்.18281/18/DO2 நாள் 05.02.2019-ன் படி, தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, கடந்த 25.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பாராளுமன்ற தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் அமுலில் இருந்ததாலும், நிர்வாக காரணங்களை முன்னிட்டும் கடந்த 12.06.2019 அன்று தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டு, Technical Bid Evaluation செய்யப்பட்டதில், தொழில் நுட்ப தகுதி பெறப்பட்டதை தொடர்ந்து, குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி, 14.06.2019 அன்று Price Bid திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.J.ஜெபமணி தாஸ்,<br>பூவன்பாட்டு விளை,<br>குட்டக்குழி, வியன்னூர் அஞ்சல்<br>கன்னியாகுமரி மாவட்டம். | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>(ரூ.88,51,842.11) |

மேற்காணும் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று Letter of Acceptance (LOA) வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.870-1/2018/இ1

**தீர்மானம் எண்.2082 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.4

இந்நகராட்சிக்கு 2018-2019 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கைக்கு தேவையான கேட்பு பதிவேடு, நிலுவை கேட்பு பதிவேடு ஸ்பெயிரல் பயிண்டிங் மற்றும் அலுவலகத்திற்கு தேவையான ஆணையர் கையெழுத்து ஸ்டாம்பு ஆகியவை அச்சடித்த வகையில் ரூ.3650/- தாசன் அச்சகத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது

ந.க.எண்.4826/2012/அ1

**தீர்மானம் எண்.2083 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.1

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை (நிலை) எண்.92, நாள் 03.07.2007–ன் படி வழங்கப்பட்ட அறிவுரைகள் படி, 9 ஆண்டுகள் நிறைவடைந்த கடைகளுக்கு தற்போதைய நிலவரப்படியான (அங்காடி மதிப்பு ) அரசு மதிப்பு நிர்ணயம் செய்து, நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைக்கு எவரும் எடுத்துக் கொள்ள முன்வராத நிலையில் 06.02.2018, 20.03.2018, 19.07.2018, 29.08.2018, 26.10.2018, 14.11.2018, 13.12.2018, 13.02.2019,21.06.2019 ஆகிய தியதிகளில் பொது ஏலம் நடைபெற்றது. ஆனால் காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள் 17,18,22 முதல் 27,36,37 மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள் 38 முதல் 40, 57 முதல் 59 ஆகிய கடைகளையும் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட டேவணித் தொகை செலுத்தி ஏலத்தில் எடுக்க எவரும் முன்வரவில்லை. மேலும், நகர்மன்ற தீர்மானம் எண்.1793, நாள் 28.02.2018–ன் படி கடைகளுக்கு டேவணித் தொகை ரூ.1,00,000/– என நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி டேவணித் தொகை அதிகம் என கருதி கடைகளை ஏலத்தில் எடுக்க எவரும் முன்வரவில்லை. இதனால் நகராட்சிக்கு தொடர் வருவாய் இழப்பு ஏற்படுவதுடன் எதிர்காலத்தில் தணிக்கையில் தடை எழுப்பவும் வாய்ப்புள்ளது. எனவே நிர்வாக நலனை கருத்தில் கொண்டும் நகராட்சிக்கு ஏற்படும் தொடர் நிதி இழப்பினை தவிர்த்திடும் பொருட்டும் டேவணித்தொகை ரூ.1,00,000/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை ரூ.50,000/– ஆக மறு நிர்ணயம் செய்து மேற்படி கடைகளை பொது ஏல நடவடிக்கைக்குட்படுத்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

## தீர்மானம் எண்.2084 அங்கீகரிக்கப்பட்டது

பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து நிலைய வணிக வளாகம் கடை எண்.16 குத்தகைக்கு எடுத்திருந்த திரு.சி.முருகன் என்பவர் தற்போது தனக்கு கடை இல்லாததால் அன்னார் செலுத்திய வைப்பு தொகை வழங்க கோரப்பட்டுள்ளது. இவ்வலுவலக காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டின்படி மேற்படி நபரின் பெயரில் ரூ.27000/-ம் உள்ளதை திரும்ப வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.818/2018/பி1

## தீர்மானம் எண்.2085 அங்கீகரிக்கப்பட்டது

பொருள் எண்.3

இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி.நிர்மலா ஜாய் சேமநலநிதி வட்டி கோரி தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.15064/2019 க்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/- வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.921/2019/பி1

## தீர்மானம் எண்.2086 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.4**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி, அபராதம்/ சேவைக்கட்டணம் வசூல் செய்ய ரெசீது பிரின்ட் போட்டு பைண்டிங் செய்த வகையில் ரூ.950/-க்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2042/2015/எச்1

## தீர்மானம் எண்.2087 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி ஆட்டோ எண். TN 75 P 8424 -ல் பழுது ஏற்பட்டுள்ளது. சரி செய்ய வாகனத்தின் பின் தொட்டி இறக்கி சேச்சில் புதிய தகடு வைத்து வெல்டிங் செய்து சரி செய்வதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.36000/-க்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்1407//2014/எச்1

## தீர்மானம் எண்.2088 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் திரு.சி.சுந்தர்ராஜ் ஓட்டுநர் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணி பார்த்தமைக்கு சென்னையிலுள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மூலமாக தங்க பதக்கம் தயாரிப்பதற்கு செலவு தொகை ரூ.17850/- வழங்க கேட்டு மேலாளர் தமிழ்நாடு கைவினை தொழில் முன்னேற்ற கழகத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே தங்க பதக்கம் தயாரிப்பதற்கான செலவு தொகை ரூ.17850/- பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்1197//2018/சி1

## தீர்மானம் எண்.2089 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்வதற்காக ஏ.வி.எம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சிறுபாலத்தை விரிவாக்கம் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட ரூ.3,50,000/-க்கான மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2240, நாள் 31.05.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 16.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு (ரூ.3,08,507/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 21.17% அதிகம் (ரூ.3,74,030/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.சத்தியதாஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.386//2019/இ1

**தீர்மானம் எண்.2090 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு 2019-20 ஆம் ஆண்டு கீழ்காணும் பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 20 w Crompton LED Tube Light | 925 |
| 2 | 18 w 4 pin Crompton LED Tube | 200 |
| 3 | Side Holder | 300 |
| 4 | 4 Pin Holder | 200 |
| 5 | Insulation Tap | 30 |
| 6 | 1/18 Copper Flex wire | 2 coils |
| 7 | 1/8 Copper Wire V.I.R | 4 coils |
| 8 | 3/20 Copper wire V.I.R | 3 coils |
| 9 | 7/20 Copper Wire V.I.R | 3 coils |
| 10 | 16 A Fuse Carrier | 20 |
| 11 | 32 A Fuse Carrier | 20 |
| 12 | 63 A Fuse Carrier | 10 |
| 13 | 4 pin LED Fittings | 50 |
| 14 | 100 w LED Fittings | 10 |
| 15 | Digital Timer | 10 |

எனவே, மேற்காணும் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9,90,000/-க்கான மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.450/2019/இ2

**தீர்மானம் எண்.2091 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள 10HP மின் மோட்டார், மின் சாதனங்கள் மற்றும் பேனல் போர்டு ஆகியவற்றில் பழுதுகள் ஏற்பட்டதால், குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. பாராளுமன்ற தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தால், பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு, மேற்காணும் பழுது நீக்கப்பணிகளுக்காக ரூ.1,20,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ் பணியினை மேற்கொண்ட வகையில் அதற்கான செலவினம் ரூ.1,20,000/-ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.350/2019/இ2

**தீர்மானம் எண்.2092 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில், குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள பிரதான குழாய், பகிர்மான குழாய், நீரேற்றும் குழாய், வால்வு மற்றும் வால்வு றோப்களில் பழுது ஏற்பட்டு, பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது. பாராளுமன்ற தேர்தல் மாதிரி நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தால், பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு, மேற்காணும் பழுது நீக்கப்பணிகளுக்காக ரூ.1,30,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ், பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்ட வகையில் அதற்கான செலவினம் ரூ.1,26,162/-ஐ நகராட்சி குடிநிர் வழங்கல் நிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.344/2019/இ2

**தீர்மானம் எண்.2093 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன் சந்தை முதல் தளம் கடை எண்.1, வரிவிதிப்பு எண்.148/2017007-ஐ திருமதி.T.ராஜகுமாரி என்பவர் 01.08.2017 முதல் மாத வாடகைக்கு எடுத்துள்ளார், கடைக்கு முன் வைப்புத் தொகையாக ரூ.1,64,400/- இந்நகராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. கடைக்கு 2018 ஜுன் முதல் 2019 ஜுலை வரை மாதவாடகை ரூ.2,26,324/- நிலுவையாக உள்ளது. முன்வைப்புத் தொகையை விட மாதவாடகை அதிகமாக நிலுவை உள்ளதால் மேற்படி கடையின் முன்வைப்புத் தொகையிலிருந்து மாதவாடகையை ஈடு செய்யவும், பாக்கியுள்ள தொகையை நடவடிக்கை மேற்கொள்ளவும், கடையின் உரிமத்தை 01.08.2019 முதல் ரத்து செய்துவிட்டு கடையை மறுஏலம் விடவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.2094 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை சந்திப்பு பயணியர் விடுதி அருகில் குளச்சல் - திங்கள் நகர் பிரதான சாலையின் குறுக்கே சிறுபாலம் அமைக்கும் பணியினை ரூ.4,50,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2080 நாள் 08.07.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.24 % அதிகம் (ரூ.3,83,640/-) |
| 2 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் (ரூ.3,82,716/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி பணியினை நகராட்சி மூலம் மேற்கொள்வதற்கு, கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாகர்கோவில் கடிதம் எண்.1564/2019/வ2 நாள் 22.07.2019 -ன் படி, அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.935/2019/இ1

## தீர்மானம் எண்.2095 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில், பழுதடைந்துள்ள வடிகால், மேல்மூடிகளை சீரமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2053 நாள் 28.06.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.56 % அதிகம் (ரூ.4,26,819/-) |
| 2 | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் (ரூ.4,24,409/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.37/2019/இ1

## தீர்மானம் எண்.2096 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாத்நகர் பகுதியில், பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணியினை ரூ. 3,25,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2078 நாள் 28.06.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.27 % அதிகம் (ரூ.2,78,581/-) |
| 2 | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் (ரூ.2,77,807.70/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.810/2019/இ1

## தீர்மானம் எண்.2097 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை சாலை பயணியர் விடுதி முதல் வெள்ளியாகுளம் சந்திப்பு வரை தற்போது பதிக்கப்பட்டுள்ள 3”PVC பகிர்மான குழாயினை மாற்றி 4”PVC குழாய் (110 mm) அமைக்கும் பணியினை ரூ.6,00,000/- மதிப்பீட்டில், குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2077 நாள் 28.06.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.05 % அதிகம் (ரூ.5,31,335/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு (ரூ.5,24,695/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.20% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.720/2019/இ2

**தீர்மானம் எண்.2198 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.16**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கு தேவையான மின்மோட்டார், பேனல் போர்டு, வால்வுகள் ஆகியவற்றை ரூ.8,60,000/- மதிப்பீட்டில், குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் கொள்முதல் செய்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2066 நாள் 28.06.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.13 % அதிகம் |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.11% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.11% குறைவாக அறித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.721/2019/இ2

**தீர்மானம் எண்.2099 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.17

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கான மின்மோட்டார், மின்சாதன பொருட்கள் மற்றும் பேனல் போர்டுகளின் 2019-20 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.4,00,000/- மதிப்பீட்டில், குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2075 நாள் 28.06.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.11 % அதிகம் (ரூ.3,55,905/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.93% குறைவு (ரூ.3,45,288/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.93% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.188/2019/இ2

**தீர்மானம் எண்.2100 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.18

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கான பகிர்மான குழாய், பிரதான குழாய் மற்றும் வால்வுகளின் 2019-20 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.6,00,000/- மதிப்பீட்டில், நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2076 நாள் 28.06.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.77 % அதிகம் (ரூ.5,25,949/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.25% குறைவு (ரூ.5,20,564/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.25% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

. ந.க.எண்.189/2019/இ2

**தீர்மானம் எண்.2101 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.19

இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ் காலனி மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோயில் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகள் 16,23-ன் குடிநீர் சுவை குன்றியதால் அவற்றை Plug செய்துவிட்டு, பாலத்தன்கரை பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகள் 31,32 ஆகியவற்றை ஏற்கனவே உள்ள பிரதான குழாயுடன் இணைக்கும் பணியினை ரூ.90,000/- மதிப்பீட்டில், நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2067 நாள் 28.06.2019-ன் மூலம் ஏற்கனவே

ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 23.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.04 % அதிகம் (ரூ.78,564/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.27% குறைவு (ரூ.77,540/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.27% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.189/2019/இ2

## தீர்மானம் எண்.2102 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள் எண்.20

இந்நகராட்சிக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017-18-ன் கீழ், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் அமைத்தல் பணிக்கு கீழ்காணும் விவரப்படி திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணி விவரம் | திருத்திய நிர்வாக அனுமதி விவரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | திருத்திய மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சி - பேருந்து நிலையம் பகுதியில் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் அமைத்தல் (மாவட்ட ஆட்சியர் செ.மு எண்.ஆ3/3022/2017 நாள் 22.01.2018) | குளச்சல் நகராட்சி - டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தில் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் அமைத்தல் | 5.00 | 3.18 |

மேற்காணும் திருத்திய நிர்வாக அனுமதி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் - செயல்முறைகள் எண்.ஆ3/3022/2017 நாள் 18.02.2019-ன் படி வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.3,18,000/-க்கு தயார் செய்யப்பட்டு, கடந்த 17.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்க முன்வராத நிலையில், திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி 25.07.2019 அன்று குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s. Tech Works Coimbatore | மதிப்பீட்டை விட 1.59% அதிகம் (ரூ.3,15,400/-) |
| 2. | M/s.Crystal Watekk Coimbatore | மதிப்பீட்டை விட 0.21% குறைவு (ரூ.3,09,785/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Crystal Watekk, Coimbatore அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.21% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.742/2017/இ1

**தீர்மானம் எண்.2103 அங்கீகரிக்கப்பட்டது**